# தூதன்

தூதன்-26 ஜூன் 2017 தூது-6

இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண் நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை. ஏசாயா 64:8




தென் இந்திய திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| ஆராதனை பாடல்கள் | 12 |
| கப்பல் புயல்திகிலில்! தப்பல் பவுல்தயவில்!! | 13 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| Young Reader's Column | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| மாடு | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 31 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary Celebrants | 37 |
| Babylonian Captivity | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

## திருச்சபை - அமைப்பு, ஆளுகை
## (CHURCH - ORGANISATION & ADMINISTRATION)

"ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லாரும் பணிந்திடுங்கள், ஏனெனில் கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை. இப்பொழுதுள்ள ஆட்சிப் பொறுப்புகளைக் கடவுளே ஏற்படுத்தினார்." (ரோமர் 13:1).

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

அனைத்து அதிகாரமும் ஆற்றலும் கொண்ட கடவுளிடமிருந்தும், திருக்குமாரனாம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும், ஆலோசனை தந்து எச்சரிக்கும் தூய ஆவியாரிடமிருந்தும் உங்களனைவருக்கும் அருளும் அமைதியும் உண்டாவதாக. கடந்த ஐந்து மாதங்களாக கடவுளே நம்மையும் நம் குடும்பங்களையும், நம் திருச்சபைகளையும், இந்த நல்ல தேசத்தையும், நம் தாய் நாட்டையும், இம்முழுவுலகையும் ஆளுகை செய்து வழிநடத்தின கிருபைகளை எண்ணி நன்றி கூறுவோம். ஒவ்வொரு ஜூன் மாதமும் நமது திருச்சபையின் பொதுக்குழு கூடி, நிர்வாக, ஊழிய ஆன்மீக அலுவல்களை அலசி ஆராய்ந்து, தீர்மானங்களை நிறைவேற்றி, சபையை உற்சாகப்படுத்தி வருவதை நாம் அறிவோம். ஈராண்டுகளுக்கு ஒருமுறை செயற்குழுவையும் நாம் தெரிவுசெய்து, இறையருளினாலே அது செயல்படவும் உந்துதல் தருகின்றோம். ஆகவே திருச்சபையின் ஆன்மீக மற்றும் சமூகப்பணிகளை நிறைவேற்றத் தெரிவு செய்யப்படும் செயற்குழுவைத் தீர்மானிக்கும் இம்மாதத்தில் திருச்சபையின் அமைப்பு மற்றும் ஆளுகை பற்றிய ஒரு விவிலிய ஆய்வை இம்மடலில் காண்போம்.

**பழைய ஏற்பாட்டில் ஆலய அமைப்பும், ஆளுகையும் (Temple structure and Administration in the OT) :** ஆறு நாளும் வேலை செய்யவும், ஏழாம் நாளை இறைவனை நினைத்து நன்றி கூறும் ஓய்வு நாளாகவும் பழைய ஏற்பாடு எடுத்தியம்புகிறது. அதன்படியே பாலை நிலத்தில் உருவாக்கப்பட்ட முதல் ஆலய அமைப்பு "ஆசரிப்புக்கூடாரம்" என்பதாகும் (யாத்.36:8-39:43). இக்கூடாரம் பாலைநிலத்தில் இறைப்பிரசன்னத்தை உணர எத்தகைய வகையில் அமைக்கப்படவேண்டும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், புதிய ஏற்பாட்டில் இக்கூடாரம் திருச்சபைக்கும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமான முன்னடையாளமாய் சுட்டப்பட்டிருக்கிறபடியால் (எபிரெயர் 9:2-21) இதைத் திருச்சபை அமைப்பு மற்றும் ஆளுகையின் ஒரு முன்னடையாளமாய் புரிந்து கொள்ளக்கூடும். இவ்வாசரிப்புக் கூடாரத்தில் திருப்பணியாற்ற சிறப்பான சிலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இறைவனும் இறைமக்களும் சந்திக்கின்ற இடமாகவும் (யாத். 25:22), தொடர்ந்து அவர்களுக்கு ஆலோசனைத் தந்து வழிநடத்தும் அடையாளமாகவும், அத்திரு உறைவிடத்திற்குத் திருப்பணி செய்ய ஆரோனையும், அவர் குமாரரையும் அழைத்து திருப்பொழிவு செய்து பயன்படுத்துவதையும் காணமுடிகிறது (யாத். 28-39). அந்தக் கூடாரமே மக்களைத் தொடர்ந்து வழிநடத்தும் ஆண்டவரின் ஆலோசனை மையமாக மாறியது (யாத்.32:7-23). இக்கூடாரத்தைப் பெயர்த்து எங்கெல்லாம் ஆண்டவரின் பிரசன்னம், ஆலோசனை, வழிநடத்துதல் தேவையோ அங்கெல்லாம் நிறுவி இஸ்ரவேலர் இறைத்தலைமைத்துவத்தை உணர்ந்தனர், கீழ்படிந்தனர். இறைவனின் குரலைக் கேட்கும் ஆயத்தங்களை ஆரோன் குடும்பத்தார் செய்தனர். (Tabernacle was the first mobile structure for the presence of God which was the place to hear the divine theophany to lead and administer the people of God in wilderness and the family of Aaron was sacredly anointed to do the holy work.)

வனாந்தரத்தில் இறைப்பிரசன்னம் இவ்வாறு உணரப்பட்டு ஆசாரிப்புக் கூடார அமைப்பும், நிர்வாகமும் இவ்வாறு செயல்பட்டிருக்க, இஸ்ரவேலர் கானான் நாட்டிற்குள் குடிபெயர்ந்து நிலையான ஒரே இடத்தில் ஆண்டவரின் அருட்பிரசன்னத்தை உணர "திருக்கோயில்" (Temple) ஒன்றை தலைநகராம் எருசலேமில் நிறுவத் தீர்மானித்தனர். பேரரசனாம் தாவீது இதற்கான சகல முயற்சிகளையும் செய்யத் தொடங்கி, அவர்தம் மகன் பேரரசன் சாலொமோன் அதை நிறைவு செய்கிறார் (2 சாமுவேல் 7, 1 அரசர்கள் 6). அதன் வழியே சாலொமோனும், இறைமக்களும் இறைவனே தங்களை நிர்வகித்து வழிநடத்தவும், நல்வழிப்படுத்தவும், பாவம் மன்னிக்கவும், தீர்ப்பு செய்யவும், பாதுகாக்கவும் வேண்டி நின்றனர் (2 சாமுவேல் 8). ஆகவே அங்கிருந்து அரசரின் நிர்வாகம் மற்றும் ஆன்மீக கடமைகள், வழிநடத்துதல்கள் போன்றவை மக்களை வந்தடைந்தன. அக்கோவிலில் பணி செய்யவும் சிறப்புக்குரிய லேவி கோத்திரத்தாரும், குருக்களும் திருப்பணி செய்து இறைவனையும் மக்களையும் இணைத்தனர். இப்படியே எருசலேம் தேவாலயத்தினுடைய அமைப்பும், நிர்வாகமும் இஸ்ரவேல் சமுதாயத்தை, தேசத்தை வழிநடத்தின. (When the people of Israel settled in the country of Canaan and established themselves by the grace of God, Emperor David desired to built a temple, to feel the permanent presence of God in a structure and it was completed by Emperor Solomon. It was dedicated and people were administered under this organized temple in which the leadership services was rendered by the Levities and the Priests. (Ref. 2 Samuel 7 and 1 Kings 6).

கையால் செய்யப்பட்ட இந்த ஆலயத்தில் ஆண்டவரை அடக்கக்கூடுமோ என்று மக்களின் மனந்திரும்புதலை வலியுறுத்தி இறைத்தொனி எச்சரிப்புக் கொடுக்கப்பட்டாலும் எருசலேம் தேவாலயமே தேசத்தின் மைய நிர்வாக இடமாக அமைந்துவிட்டது. ஆலயமும், ஆலயத்தின் வழியே நிர்வாக ஆலோசனை வழிநடத்துதலும் இல்லாத சிறையிருப்பின் காலத்தில் இவ்வாலயத்தை மீண்டும் கட்டி தம் வாழ்வை நெறிப்படுத்த மக்களும், நெகேமியா, எஸ்ரா போன்ற தலைவர்களும் உணர்ந்து, தாய் தேசத்திற்குத் திரும்பி ஆலயம் மற்றும் அலங்கத்தை மீண்டும் நிறுவி இறைநிர்வாகத்தை உணர்ந்தனர்.

**புதிய ஏற்பாட்டில் திருச்சபை அமைப்பும், ஆளுமையும்** (Church administration and organisation in the NT): ஆனால் கள்ளர் குகைபோல் சுயநலத்தினால், சுரண்டலினால் மாறிவிட்ட ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள் மீண்டும் கட்டுவேன் (யோவான் 2:15-20) என்று தம் வாழ்வையும், மரணத்தையும், உயிர்ப்பையும் வெளிக்காட்டி நிரூபித்த ஆண்டவராம் இயேசுகிறிஸ்துவே திருக்கோவிலின் நிறைவாக வெளிப்பட்டு நலிந்துபோன இறைமனித உறவை புதுப்பிக்கிறார். பேதுரு அடிகளிடம், “இக்கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்” (மத்தேயு 16:18) என்ற பொறுப்பை அளிக்கிறார். சீடர்களை அப்போஸ்தலராக ஆண்டவர் நியமித்து விண்ணேற்றமடையுமுன் போதித்து வழிநடத்தும் பொறுப்பை ஒப்படைக்கிறார் (அப்.1:8, மத்.28:16-20). பின்னர் பன்னிரண்டு அப்போஸ்தலரும் ஆண்டவரால் தொடப்பட்ட அப்போஸ்தலரான பவுல், சீலா, தீத்து, தீமோத்தேயு போன்றவர்களும் நிறுவப்பட்ட திருச்சபைகளை நிர்வகிக்கவும், அமைப்புக்களை உருவாக்கவும் வித்திடுகின்றனர். அதன்படியே ஏழைகளை விசாரிக்க ஒரு உதவிக்காரரும் (அப்.6:1-6), மேற்பார்வையாளர்கள், மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்ற மும்மடிப்பு அமைப்பு நிர்வாகத்தையும், திருத்தொண்டு முறையையும் ஏற்படுத்துகின்றார். (அப்.20:17, 11-30,14-23, பிலி.1:1). இவை தவிர திருப்பணியாளர்களின் பட்டியல்களையும் பவுல் சுட்டிக்காட்டுகிறார் (1 கொரி.12:28, எபே.4:13). இதன்படி பொதுநிலையினரும் இத்திருப்பணி நிர்வாகத்தில் தம்மை ஈடுபடுத்துகின்றனர். திருச்சபை ஆட்சிமுறை பற்றிய பவுலின் கருத்து எதுவானாலும், கிறிஸ்துவே உண்மையான தலைவர் என்றும் (1 கொரி. 12), அன்பே அடிப்படைப்பண்பு (1 கொரி. 13) என்றும் பவுல் குறிப்பிடுகிறார். தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் திருச்சபையானது வளர்ந்து பெருகி நிர்வாகம் மற்றும் அமைப்பு முறைகளைக் கொண்டு இயங்கிவருகிறது. திருச்சபையின் எந்தவொரு அமைப்பிற்கும், நிர்வாகத்திற்கும், அதன் தெரிவிற்கும் கிறிஸ்துவே வழிகாட்டி மற்றும் தலைவர் என்ற அடிப்படை விசுவாசத்துடன் திருச்சபை உணர்ந்து சமூக ஆன்மீக பணிகளில் செயல்படுமானால், இறையாட்சியின் முன்சுவையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி, சபை போதகர்.

## கடவுளின் தாய்மை (The Motherhood of God)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

தந்தையைப்போல மட்டுமின்றி தாயைப்போல நம்மை நேசித்து, அரவணைத்து, பாதுகாத்து, பராமரித்து வரும் ஆண்டவரின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். கடந்த ஐந்து மாதங்களாய் நம்மைக் கிருபையாய் காத்த கடவுளுக்கு நன்றி சொல்லி இந்த ஆறாவது மாதத்திலும் அவரே நம்மை நடத்தும்படியாய் அர்ப்பணிப்போம். கடவுளைத் தந்தையாக பார்க்கும் அளவிற்கு தாயாக நாம் பார்ப்பதோ அல்லது புரிந்துகொள்வதோ இல்லை. “அப்பா பிதாவே” என்று கடவுளை அழைக்கும் வார்த்தைகள் திருமறையில் இருந்தாலும், “அம்மா மாதாவே” என்ற வார்த்தைகள் வேதத்தில் இல்லாதபடியால் நம்முடைய புரிதல் இன்னும் குறைவுபடுகிறது. ஆனால் கடவுளைத் “தாய்” (mother) என்று புரிந்துகொள்ளும் பல நிகழ்வுகள் மற்றும் செய்திகள் அடிப்படையில் கடவுள் இரு தன்மையும் கொண்டவர் என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது. அந்த அடிப்படையில் கடவுளின் தாய்மைத் தன்மையின் ஆழத்தை இக்கடிதத்தில் காண்போம்.

**1. படைப்பில் தாய்மை (Motherhood in Creation) :** ஆணோ பெண்ணோ இருபாலரையும் பிறப்பிப்பது பெண்ணே. அந்த உண்மையின் வெளிச்சத்தில் ஆணின் எலும்பிலிருந்து பெண் உருவாக்கப்பட்டாள் என்ற திருமறை ஆரம்பம் இருந்தாலும், ஆணுடன் பெண்ணையும் தமது சாயலிலேயே இறைவன் உருவாக்கியதையும் (ஆதி.1:27), பெண்ணிடமிருந்தே ஜீவனுள்ள வம்சங்கள் உருவாக்கப்படுவதையும் (ஆதி.3:16) நாம் தெளிவாக பார்க்கிறோம். ஆகவே கடவுளைத் தாய்மைப் படைப்பாளியாக நாம் நிச்சயமாக விசுவாசத்தினாலே மாத்திரம் அல்ல, படைப்புகளின் மற்றும் மனித பிறப்புகளின் அடிப்படையிலும் நம்பவேண்டும்.

**2. அரவணைத்து வழிநடத்தும் தாய்மை (Motherhood in caring and caressing):** இஸ்ரவேலரைக் கர்த்தர் வழிநடத்தின தன்மையைக் கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்...! (உபா.32:11,12) என்ற வசனத்தின் வெளிச்சத்திலும், “கோழி தன் குஞ்சுகளைக் கூட்டிச் சேர்ப்பதுபோல கர்த்தர் தம் மக்களை கூவி அழைக்கிறார்” என்ற வாக்கியத்தின் அடிப்படையிலும் கடவுள் ஒரு தாயைப்போல தம் மக்களை அரவணைத்து வழிநடத்துகிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

**3. தேற்றும் தாய்மை (Motherhood of comfort):** ஏசாயா 66:13-ன்படி ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல நான் உங்களைத் தேற்றுவேன், நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள் என்ற வாக்குத்தத்த வசனம் கடவுளின் தேற்றும் தாய்மைக்குத் தலைசிறந்த உதாரணம். பெரும்பாலும் தேற்றுவதில் ஆண்களைவிட பெண்களுக்கு அதிக பங்குண்டென்பதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆண்டவர் இயேசுவின் மனதுருக்கம் (Compassion), பரிவு (mercy), அன்பு (love) மற்றும் ஆறுதல் (comfort) போன்ற பண்புகளிலும் நாம் கடவுளின் தாய்மையை ஆழமாக அறியலாம். கடவுளின் ஆவி (pneuma) என்ற வார்த்தையும் பெண்பால் சொல். ஆகவே தேற்றும் ஆவியானவரையும் இதே உணர்வில் அறியலாம்.

ஆகவே தாய் தந்தையைக் கனப்படுத்தக் கட்டளையிடும் கடவுளின் தன்மையை பெற்றோரின் இவ்விரண்டு நிலைகளிலும் புரிந்துகொண்டு குடும்பத்தையும், திருச்சபையையும், சமுதாயத்தையும் ஆண் பெண் ஏற்றத்தாழ்வின்றி நடத்துவோம். கடவுள் இச்சிந்தனைகளில் நம்மை நிலைப்படுத்தி உறுதிப்படுத்துவாராக. ஆமென்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜூன் 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-06-2017 பெந்தேகொஸ்தே திருநாள் | வாரும் தூய ஆவியாரே படைப்புகளைப் புதுப்பியும் | எசேக். 36:24-36 | அப்போ. 2:1-13 | யோவான் 20:19-23 | 29 |
| 09-06-2017 திரித்துவத் திருநாள் | திரித்துவக் கடவுளை நம்புகிறோம் | எசேக். 1:15-28 | 2 கொரிந். 13:11-14 | மத்தேயு 28:16-20 | 98 |
| 16-06-2017 | வழிபாடு: விசுவாச மக்களின் கொண்டாட்டம் | ஏசாயா 6:1-8 | வெளிப். 4:1-11 | யோவான் 4:16-26 | 148 |
| 23-06-2017 | சீடத்துவமே சாட்சி | 2 இராஜா. 2:1-14 | தீத்து 2:1-15 | யோவான் 3:22-30 | 119:33-48 |
| 30-06-2017 உக்கிராணத்துவ திருநாள் | உக்கிராணத்துவம்: வளங்களை பொறுப்புடன் நிர்வகித்தல் | யாத்தி. 18:13-27 | 2 கொரிந். 8:1-15 | மத்தேயு 25:14-30 | 147 |

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

### இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன். சங்கீதம் 48:14 (மு)

தேவனுடைய ஆலயத்தில் அவருடைய கிருபையைச் சிந்திக்கும்படி எதிர்பார்க்கும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் தம்முடைய வார்த்தையை மகிமைப் படுத்துகிறவர் நம்முடைய தேவன் (சங்.138:2(பி). பிரஸ்தாபங்களென்றால் இந்த உலகத்தில் காணப்படும் சகல அதிகாரங்கள், வல்லமைகள், பிரமிப்புகள், இயற்கை போன்றவை. இவையெல்லாவற்றிலும் அவருடைய வார்த்தையே பெரியது. அவர் தம்முடைய வார்த்தையின்மூலம் தம்மை நமக்கு யார் என வெளிப்படுத்துகிறார். அவருடைய வார்த்தையினால் அவரை அறிகிற அறிவைப் பெறுவதன் மூலம் நம் வாழ்வில் வெற்றியும், ஆசீர்வாதமும், நிச்சயமான நம்பிக்கையும் நம் சுதந்தரமாகும்.

எம்மாவூர் சீஷர்கள் துக்கத்தோடு வழிநடக்கும்போது, தமது தீர்க்கதரிசிகளின் வார்த்தையை வெளிப்படுத்தி, அவர் யார் என இயேசுகிறிஸ்து உணர்த்தியபோது, அவரின் உயிர்த்தெழுதலின் சந்தோஷத்திற்கு, வெற்றிக்குப் பங்காளிகளானார்கள். பவுலும், “நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன்” எனத் தனது அனுபவத்தைக் கூறுகிறார். இந்த தேவன் யார்? என அவர் வார்த்தையின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

**1. பிரியமாயிருக்கிறவர் (எண். 24:1(மு)) Loving god :** மோவாபின் ராஜாவான பாலாக், இஸ்ரவேல் மக்களின் பாளையத்தைக் கண்டபோது, அவன் அவர்களின் ஜெயத்தையும் (எண்.22:2), பலத்தையும் (22:6), பெருக்கமான மக்கள் கூட்டத்தையும் (22:3), எகிப்திலிருந்து இரட்சித்த தேவனுடைய அற்புத வல்லமையையும் (22:11) கண்டான். இதைக்கண்டு கலங்கின பாலாக், இஸ்ரவேல் ஜனங்களோடு நேராக எதிர்த்து நிற்க பயந்து, பில்லி சூனியம், ஏவல் போன்றவைகளை நம்பி, குறிசொல்லும் பிலேயாமை அழைத்து, அவர்களைச் சபிக்கவும், வெறுத்துவிடவும் வேண்டுமென (23:7(பி)) தீர்மானித்தான். அப்படியே சாத்தானும், தேவன் நம்மை ஆசீர்வதிக்கவே பிரியமுள்ளவராயிருக்கிறார் என்பதைக் கண்டு, சாபத்தினாலும், வெறுப்பினாலும் நம் வாழ்வை கசப்பாக்கும்படி, நாம் வேலை பார்க்கும் இடங்களிலும், குடும்பங்களிலும், அநேகப் போராட்டங்களை, பல்வேறு உபாய தந்திரங்களோடு கொண்டு வருவான். எகிப்திலிருந்து மீட்டுக்கொண்ட இஸ்ரவேலை மறக்காத தேவன், பாலாக்கின் திட்டம் நிறைவேற பிலேயாமை அனுமதிக்கவே இல்லை. நாம் அவருடைய இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் ஜனம் என உணரும்போது சாபமும், வெறுப்புமான சத்துருவின் கிரியைகளை அழித்து, ஆசீர்வாதத்தைத் தருகிறார். பிலேயாம், இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதித்ததைக் கேட்டபோது (23:7-10), பாலாக் ராஜா அவனை இஸ்ரவேலின் கடைசிப் பாளையத்தை மட்டும் பார்க்கும்படி (23:13) அழைத்துச் சென்று, அங்கே அவர்களைச் சபிக்கத் திட்டமிட்டான்.

ஏனெனில் பாளையத்தின் முன்னிருப்பவர்கள் பெலவான்களும், தேவன்மேல் வைராக்கியம் நிறைந்தவர்களும் இருப்பார்கள். பின்பாளையத்தில் பெலவீனர், பரிசுத்தத்தில் குறைவு உள்ளவர்கள் இருப்பார்கள் என பாலாக் நினைத்து, அந்த இடம் சாபம் கிரியை செய்யுமிடம் என எண்ணினான். ஆனால்,"ஆசீர்வதிக்கக் கட்டளை பெற்றேன்" என ஆசீர்வதிக்கவே பிலேயாம் கர்த்தரால் ஏவப்பட்டான் (23:20). ஏனெனில் அவர் யாக்கோபில் குற்றம் பார்க்கிறதில்லை (23:21). நம் வாழ்விலும் குற்றங்கள் உண்டு, குறைவுகள் உண்டு. குற்றஞ்சாட்டுகிற சாத்தான், நம் குற்றங்களைக் காட்டி, நமக்குள் சாபத்தைக் கொண்டுவர எத்தனித்தாலும், தேவனின் பிரியம் நம்மேல் இருப்பதாலும், அவரே நம்மை நீதிமானாக்குகிறதாலும் ஒரு சாபமும், மந்திரமும் நமக்கு எதிராகக் கிரியை செய்கிறதில்லை.

**2. பரிதபிக்கிறவர் (மாற்கு 8:2)** Compassionate God : ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன் என்றவர் நல்ல மேய்ப்பனான இயேசுகிறிஸ்துவே. ஆடுகளுக்காகத் தன்ஜீவனைக் கொடுக்கும் நல்ல மேய்ப்பன் அவர். ஜீவன் நமக்குள் உண்டாகி, அது பரிபூரணப்பட சித்தமுள்ளவர்( யோவான் 10:10-11). ஆடுகளுக்குச் சொந்தமானவர், கவலைப்படுபவர், மேய்ச்சலுள்ள இடங்களுக்கு வழிநடத்துகிறவர், ஆடுகளின் நிலையை அறிந்தவர். நாட்களையும், நேரத்தையும், காலத்தையும், பசியையும், அலைச்சல்களையும் அறிந்திருக்கிறவர். இந்த அநுபவங்களை விசுவாசிக்கிறதனாலேயே பிழைக்கிறோம், ஜெபிக்கிறோம், அவரோடேயே ஐக்கியம் கொள்ள விரும்புகிறோம். (மாற்கு 8:2). இவற்றை அறிந்ததினால்தான் மூன்று நாளானபோதும், அவரோடு ஐக்கியமாயிருப்பதையே ஜனங்கள் விரும்பினார்கள்.

பரிதபிக்கிறவர், இருக்கிறதை ஆசீர்வதித்து வர்த்திக்கப்பண்ணுகிறவர். மீதியெடுக்கும்படி ஆசீர்வதிக்கிறவர் (8:8). மாதத்தின் முடிவில், வருமானத்திற்கு மிஞ்சி செலவாகாதபடி, கஷ்டத்தினால் தவிக்காதபடி, நம் சம்பளத்தை ஆசீர்வதிக்கும்படி அவரை நோக்கி ஜெபித்து, மாதத்தைத் துவக்கும்போது, குறைவான வருமானமாயிருந்தாலும் அதிலும் மீதியானதை எடுக்கும்படியாகவும், திருப்தியாக எல்லாவற்றையும் அனுபவிக்கும்படியாகவும் மாற்றுவார்.

**3. பெலனானவர் (சங்.27:1)** Powerful God : மனிதனுடைய ஜீவனைக் கொள்ளையாடும்படி, அநேக ஆயுதங்களைச் சத்துரு, பூமியில் உபயோகிக்கிறான். அவனுடைய ஆயுதங்கள் எதிர்பாராத நேரத்தில் திடீரென தாக்கக்கூடியவை. அப்படியே யோபுவின் வாழ்விலும் பெருங்காற்று, நோய், அக்கினி, பட்டயம் போன்றவற்றை (யோபு 1:1-19) ஆயுதங்களாகச் சத்துரு திடீரெனப் பயன்படுத்தி அவனை உருக்குலைத்தபோதிலும் அவனின் ஜீவனைக் கொள்ளையாடாதபடி தேவன் காத்தார் (யோபு 1:12). அதேபோல் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் ஜீவனைக் கொள்ளையாடிப் போகும்படி, சூளையின் அக்கினியை ஆயுதமாகச் சத்துரு பயன்படுத்தினாலும், அக்கினி பெலம் செய்யாதபடி, அவர்கள் ஜீவனைக் காத்தார். நம் ஜீவனின் பெலனாக அவர் இருக்கும்போது, வேறு எந்த வல்லமையும் பெலம் செய்யாதபடி நமக்கு விரோதமாக உருவாகும் எந்த ஆயுதமும் வாய்க்காதபடி நம்மைக் காப்பார்.

தேவனுடைய கிருபையைச் சார்ந்துகொண்டு இம்மாதத்தைத் துவங்கும் நம்மை, பிரியமானவராய், பரிதபிக்கிறவராய், பெலனானவராய் வெளிப்பட்டு கர்த்தர் ஆசீர்வதிப்பராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட். உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

இப்போது மியான்மராயிருக்கும் அன்றைய பர்மாவில் யுத்தம் நடந்த சமயம் தெருவெங்கும் காயமுற்றோர். ஒரு குருவானவர் நடந்து, காயப்பட்டோருக்கு உதவி செய்து அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று கொண்டிருந்தார். ஒரு குப்பைத் தொட்டியினருகே கிடந்த ஒரு சிறு குழந்தையின்மேல் அவரது பார்வை விழுந்தது. அதன் பெற்றோர் அருகிலேயே செத்துக் கிடந்தனர். அவர் இரக்கப்பட்டு அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு போய், ஏற்கனவே 50 பெண்கள் இருந்த தனது அநாதை இல்லத்தில் சேர்த்தார். அவளுக்கு கீதா எனப் பெயரிட்டு அவளை மிகவும் நேசித்தார்.

கீதா வளர்ந்தாள். அவ்வப்போது குருவானவரிடம் போய் பென்சில், இரப்பர் அல்லது கலர் பென்சில் வேண்டுமென கேட்டு வாங்குவாள். ஒருநாள் ஒரு பஸ் நிறைய பிள்ளைகள் உள்ளே பாடுவதும், ஆடுவதுமாக இருக்கக் கண்டாள். இது என்ன எனக் கேட்டபோது இதர பெண்கள், அவர்கள் சுற்றுலா போவதாகக் கூறினார்கள். கீதா குருவானவரிடம் சென்று, “நானும் பஸ்ஸில் சுற்றுலா செல்லவேண்டும்” எனக் கேட்டாள். அவர் சிரித்துக்கொண்டே, “மகளே கீதா, சுற்றுலாவிற்கு அதிகச் செலவாகும். நீ இயேசப்பாவிடம் கேள்” என்றார்.

கீதா ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் ஜெபித்தாள். ஒருநாள் ஒரு பஸ் அவர்கள் அனாதை இல்லத்திற்கு வந்தது. பளபளக்கும் பொன்னான பஸ் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த பஸ்ஸில் பெயர்களை வாசிக்க வாசிக்க ஒவ்வொரு பிள்ளையாக ஆர்ப்பாட்டத்துடன் ஏறினர். கீதா, தனது ஜெபத்திற்குப் பதில் கிடைத்துவிட்டது என தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டே பஸ்ஸை நோக்கி ஓடினாள். ஆனால் பெயர் பட்டியலில் அவள் பெயர் இல்லை. பட்டியலில் பெயர் இருப்பவர்களை மாத்திரமே பஸ்ஸில் ஏற்றவேண்டுமெனக் கட்டளை பெற்றிருக்கிறோம் என டிரைவர் கீதாவிடம் சொல்லிவிட்டு, பஸ்ஸில் அவளை ஏற்றாமல் கிளம்பினார். விர்ர் என விரைந்தது தங்கப்பேருந்து. என் பெயர் இல்லையா என அலறி, சொப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டாள். பிள்ளைகள் எழுந்து, light-ஐப் போட்டனர்.

உடனே குருவானவர் வந்து, என்ன சத்தம், யார் விளக்கைப் போட்டது என மிரட்டினார். நான் இல்லை என மற்ற பிள்ளைகளும், கீதாவும் கூறினர். குருவானவர் விளக்கை அணைத்துவிட்டுச் சென்றார். கீதா படுக்கையில் அழுகையோடு, “என் பெயர் ஏனில்ல, நான்தானே bus-க்காக ஜெபித்தேன்” என மனதில் நினைத்துக்கொண்டே தூங்கினாள்.

மூன்று நாளைக்குப்பின் சொப்பனத்தில் இயேசப்பா, அவளுடைய பெட்டிக்குள் பானுவின் hairclip, ரீட்டாவின் வாசனை ரப்பர் கிடப்பதையும் கீதாவிடம் காட்டி, “இவையெல்லாவற்றையும் பெட்டிக்குள் வைத்துக்கொண்டு நீ தங்க பஸ்ஸில் ஏறமுடியாதே” என்றார்.

கீதா மறுநாள் காலையில் தான் திருடின பொருட்களை எடுத்து பள்ளிக்குச் சென்று பானுவிடமும், ரீட்டாவிடமும் மன்னிப்பு கேட்டு அவற்றை ஒப்படைத்தாள். சமாதானம் அவள் இருதயத்தை நிரப்பியது. அன்று நிம்மதியாகப் படுத்து உறங்கினாள். தனது கனவில் ஒரு பெரிய நோட்டில் பல பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. அங்கே கீதாவின் பெயரும் பொன் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

ஆண்டவர் ஜீவ புஸ்தகம் என ஒரு பெரிய நோட்டுப் புத்தகம் வைத்திருக்கிறார். அதில் பெயரெழுதப்பட்டவர்கள் மட்டுமே மோட்சத்திற்குள் நுழைய முடியும். அதில் பெயரில்லையானால் நரகத்திற்கே செல்வர். ஆண்டவருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ்ந்து உங்கள் பெயரை ஜீவபுஸ்தகத்தில் எழுதிக்கொள்ளும்படி ஆண்டவரைக் கேளுங்கள்.

**வேதவாசிப்புப் புகுதி :** மத்தேயு 7:13-24
**மனப்பாட வசனம் :** வெளி. 21:7,8

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## MEMORY VERSE CONTEST - 2017

**The Memory Verse Contest for the year 2017**
**will be conducted on 15th September 2017.**
**Please download the memory verses (Grade wise)**
**from our church website and make the children**
**LEARN AND BE BLESSED.**

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் ஐந்து மாதங்களைக் கடந்து, ஆறாவது மாதத்தைக் காணச்செய்த கர்த்தருக்கு கோடானுகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

05-05-2017 அன்று நெல்லைப் பேராயர் Rt.Rev.Dr.Christhudoss அவர்கள் நம் மத்தியில் வந்து கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்து கொண்டது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அவருக்கு சபை சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

12-05-2017 அன்று தொழிலாளர் தினமாக ஆசரிக்கப்பட்டது. முகாம் சகோதரர்கள், ஆண்கள் ஐக்கிய சங்கத்தினரோடு கலந்து ஆராதனையை நடத்தி, பாடல்கள் பாடினது மிகவும் சிறப்பாக அமைந்தது. ஆண்கள் ஐக்கிய சங்க பொறுப்பாளர் மற்றும் அதில் பங்குபெற்ற அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இந்த ஊழியத்தில் பங்கேற்று Keyboard வாசித்து உற்சாகப்படுத்திய Jehosh Jonah-க்கு நன்றி பாராட்டுகிறேன்.

19-05-2017 அன்று Junior Church பிள்ளைகள் ஆராதனையை நடத்தி, குறுநாடகம் மற்றும் பாடல்கள் பாடி ஆராதனையைச் சிறப்பித்தார்கள். மற்றும் அன்றைய நாளில் JSS International School-ல் Retreat நடந்தது. இதன் பொறுப்பாளர்களையும், Junior Church ஆசிரியர்கள், Volunteers யாவருக்கும் நன்றி கூறுகிறேன். இந்த நாளில் கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்துகொண்ட Rev.Praveen Chako, ஆயர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

19-05-2017 அன்று ரத்த தானம் முகாம் நடந்தேறியது. அநேகர் இதில் பங்கேற்று ரத்ததானம் செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது.

26-05-2017 அன்று சுகமளிக்கும் மருத்துவப்பணியாளர் சிறப்புவழிபாடு தினமாக ஆசரிக்கப்பட்டது. தங்கள் பாடல்களினாலும் ஆராதனையைச் சிறப்பித்தது மிகவும் அருமையாக இருந்தது. அவர்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

கடந்த நான்கு ஆண்டுகளாக எனக்கும் மற்றும் Committee members யாவருக்கும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்த சபைமக்களுக்கும் நன்றி கூறுகிறேன். கடந்த நான்கு ஆண்டுகளாக திருச்சபையின் திருப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற கர்த்தர் தந்த பாக்கியத்திற்காக கர்த்தருக்கே கனமும் மகிமையும் செலுத்துகிறேன். கடந்த நான்கு ஆண்டுகளும் Chaplaincyயின் மூலமாக எல்லாவிதங்களிலும் நாம் பெற்ற நன்மைகள் ஏராளம். அவர்களோடு செயற்குழுவாக நாம் கொண்டிருந்த உறவு மிக மிக அருமையாக நெருக்கமாக இருந்தது. நமக்கு அவர்கள் கொடுத்த முன்னுரிமையின் மூலம்தான் நாம் இப்பொழுது தொழுது கொள்ளும் விஸ்தாரமான St. Paul's Chapel-ல் 01-01-2017 முதல் ஆராதனை நடத்தி வருகிறோம். மறக்க முடியாத Chaplaincy-ன் உதவிக்காக நன்றி கூறுகிறேன். கர்த்தர் தாமே புதிதாகப் பொறுப்பேற்க இருக்கும் செயற்குழு அங்கத்தினர்களோடு இருந்து வழி நடத்துவாராக.

சிங் ரத்னம், செயலர்.

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 9 எல்லாருக்கும்
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 30 அனுக்ரக வார்த்தையோடே

**02-06-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 166 | சபையின் அஸ்திபாரம் |
| பாமாலை | 90 | தெய்வாவீ மனவாசராய் |
| கீர்த்தனை | 80 | ஆவியை அருளுமே சுவாமி |
| கீர்த்தனை | 81 | உந்தன் ஆவியே, சுவாமி |
| கீர்த்தனை | 86 | தீய மனதை மாற்ற வாரும் |

**09-06-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 34 | பிதாவே மா தயாபரா |
| கீர்த்தனை | 103 | எத்தனை திரள் என் பாவம் |
| பாமாலை | 135 | உந்தன் சொந்தமாக்கினீர் |
| கீர்த்தனை | 34 | சருவலோகாதிபா, நமஸ்காரம் |
| கீர்த்தனை | 35 | சீர்திரியேக வஸ்தே நமோ நமோ |
| கீர்த்தனை | 32 | மங்களம் சதா |

**16-06-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சி கர்த்தர் |
| பாமாலை | 118 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் |
| கீர்த்தனை | 115 | விசுவாசத்தால் நீதிமான் |

**23-06-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 103 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை | 102 | எங்கே ஓடுவேன் |
| பாமாலை | 151 | யுத்தம் செய்வோம், வாரும் |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் யேசு |
| கீர்த்தனை | 174 | தாசரே இத்தரணியை |
| கீர்த்தனை | 176 | ஆத்தும ஆதாயம் |

**30-06-2017**

| | | |
|---|---|---|
| பாமாலை | 164 | கர்த்தா, நீர் வசிக்கும் |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினைதீர் |
| பாமாலை | 149 | சிலுவை சுமந்தோனாக |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே |
| கீர்த்தனை | 132 | எல்லாம் இயேசுவே |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன், மேசியா, நான் |

## கப்பல் புயல்திகிலில் ! தப்பல் பவுல்தயவில் !!

பலநாள்துக்கம் நலநாள்திருப்பம் பவுல்எழுந்தார் பயங்களைந்தார்
    உண்ணவில்லை உறங்கவில்லை ஊஞ்சல்நெஞ்சில் மிதந்தோர்–
பலதரத்தார், பவுலின்தேவன் பலத்தகரத்தால் காத்துக்கொண்டார்
    பவுல்செய்ஜெபம் தேவதூதர் சொப்பனத்தில் வந்துசொன்னார்

அலைகடல் கொலைதிகில் நிலைகுலைவில் கப்பல்
    சொரிமணல் பறிகுழியில் சிக்கிநிக்கும் கிலியில்
தலைகால் இலக்கில்லை உலுக்கல் காற்றில்
    தறிகெட்டு நெறிகெட்டு கிரங்குண்டு சுழலில்

பாறைமோதும் பேராபத்தும் புரிந்திருக்கும் கப்பலோட்டி
    பாய்இறக்கி பாய்ச்சல்இறக்கி பாதுகாப்பை நோக்கி
பாரச்சாக்கை தூரவீசி பளுவைக்குறை வாக்கி
    மிரண்டமக்கள் ரெண்டாம்நாள் கண்டுகொண்டார் மீட்பு

ஒளியில்லை வழியில்லை வானமேஇல்லை இருட்பிடியில்
    நேரமில்லை நாளில்லை புள்ளிமின்னும் வெள்ளியில்லை
விழிதிறந்தும் பயனில்லை தெளிவில்லை திகைப்புஅலை
    உயிர்வாழும் நம்பிக்கையே உயிர்விடும் எல்லையில்

கப்பல்சேதம் தப்பிவிடாது தப்பிவிடும் உயிர்சேதம்
    கப்பல்ஆளே துக்கப்பயணி திடங்கொள்ளும் பவுலும்தெளிவும்
அப்போதோ நடுச்சாமம் அப்பாலே தெரிகிறதாம்
    கப்பல்முன்னே கரைபோலும் கடந்துபோனது பதிமூன்றுநாளாம்

பதினாலாம் பட்டிணிநாள் அதிகாலை அழைத்தார்பவுலார்
    புசிக்கத்தக வசப்படுத்தினார் தப்பிப்பிழைக்க உதவுமென்றார்
உதிராதென்றார் ஒருமுடியும் புதியஅப்பம் ஸ்தோத்தரித்தார்
    பிட்டாரதை எல்லோரின் முன்னிலையில் உட்கொண்டார்

திடமனதுடன் முடிவெடுத்தோர் உடன்பட்டார் புசித்திட்டார்
    இருநூற்று எழுபத்தாறுபேர் இணைநின்றார் பயணித்தார்
உட்கொண்டஉணவில் திருப்தியுண்டார் கப்பல்பாரம் குறைத்திட்டார்
    கோதுமையின் மூட்டைகளை தோதாக எறிந்துவிட்டார்

விடிந்துங்கூட பிடிபடல,இடம் எதுவென்றே புரியவில்லை
கரைவருது தரைதெரியுது மனக்கவலைக் கொருஎல்லை
வடிவத்திலோ துறைமுகமாக கடலிடையில் புதுவரவில்
உடைந்துகிடந்த பின்கப்பல் உடையாத முன்கப்பல்

நீந்துதிறன் உந்துகின்றோர் முந்திவந்து கரையேறவும்
பலகையிலே சிலபேரும் கப்பல்கட்டையிலே சிலபேரும்
சேர்ந்துஉடனே கரையேற ஆணையிட்டான் நூற்றுக்கதிபதி
சடுதியிலே எல்லோரும் பிடித்துவிட்டார் கரையும்தரையும்.

ஆதாரம் : அப்பேஸ்தலர் 27:14-44
கவிதை எண்: 199.
ஆக்கம் : மணிமுத்து.


## NEW PARSONAGE

Near Al Garhoud-Choithram Super Market

Behind “Le Meridian Hotel”

Street No : 47, Villa No 6A

Tel.Res.: 04 2552065, Mob: 050 5533645,

Tel.Off.: 04 2249249. Email: tamilcsi@eim.ae


## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"
நமது சபையின் அங்கத்தினர்
Mr. Jonah Jesiah அவர்களின் தகப்பனார்
Mr. Jesiah அவர்கள் 28-05-2017 அன்று
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

தீங்கு புழுதியிலிருந்து உண்டாகிறதுமில்லை,
வருத்தம் மண்ணிலிருந்து முளைக்கிறதுமில்லை.
அக்கினிப் பொறிகள் மேலே பறக்கிறதுபோல,
மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான். யோபு 5:6,7.

தொடர்ச்சி
பிரபஞ்சம்
முழுமைக்கும்
பிதா கர்த்தரே
முழுமுதல் கடவுள்.
பிறிதொரு
கடவுளில்லை
மண்ணிலும்
விண்ணிலும்
கர்த்தருக்கு
மறைவாக
மற்றொன்றுமில்லை
மனிதரின் மனதில்
மறைந்து இருப்பது
உறைந்து இருப்பது
நிறைந்து இருப்பது
எது என்பது
கர்த்தர் அறிவார்.
ஒரு காரியம்
மற்றவருக்கு
தெரியாமல்
மறைத்துவிட்டோம்
என்று மமதை
கொள்ளலாமா...
கண்ணை மூடிக்
கொண்டால் உலகம்
இருண்டுவிட்டதென்று
எண்ணிக்
கொள்ளலாமா...
அன்பரே..
கர்த்தரின் முன்
நமது படிப்பு, பதவி
பணம், புத்தி
வாதத்திறமை
எதுவுமே
பலன் தராது
கர்த்தரின்
சந்நிதானத்தில்...
ஊமை பேசும்
குருடு காணும்
செவிடு கேட்கும்
பரம் தரும்
பரிசு எது?...
நமது பாவமும்
புண்ணியமும் தான்
தராசு தட்டில்
வைக்கப்படும்.
உணர்வீர்...
ஆர்ப்பரித்து எரியும்
அக்கினியிலிருந்து
மேலே தீப்பொறிகள்
கிளம்பும்
வாழ்வில் துன்பம்
உண்டென்று
விளம்பும்
தினையளவுதான்
இன்பம். அதில்
பனையளவு
துன்பம்
கலந்திருக்கிறது.
காரணம்
பொருட்கள் மீது
நாம் வைக்கும் பற்று
நோய்போல
பற்றிக்கொள்ளும்
மனதில்
தொற்றிக்கொள்ளும்.
கேடு வரும் பின்னே
மதி கெட்டுவரும்
முன்னே...
நாம் செய்யும்
தீதும், நன்றும்
அனுசரித்தே
நன்மையும் தீமையும்
அநுபவிக்க நேரிடும்.
தீதும், நன்றும்
பிறர்தர வாரா
என்பதே
ஆன்றோர் வாக்கு
நலமாய் வாழ
நல்லதோர் வழி...
கர்த்தரை தியானிப்பது
என்பது வசந்தகாலம்
போன்றது. எனவே
பாவங்கள் உதிர்ந்து
பக்தி என்கிற
கொடி அழகாய்
படர்கிறது. அதில்
புண்ணியம்
துளிர்விடுகிறது.
நற்குணங்கள்
அரும்புகட்டி
ஜெப மலர்களாகிய
மலர்கள் மலர்ந்து
மனம் வீசுகிறது
மனம் நன்மைகளில்
திளைப்பதால்
ஆனந்த தேன்
சுவையும்
கர்த்தரின்
அருள்சுவையும்
சேர்ந்து
பரம் சேரும் வாசல்
திறக்கிறது.
பரமபிதா மலரடி
பணிகிறது.

நிறைவுறும்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## யாக்கோபு

யாக்கோபின் மனைவியாகிய ராகேல் வெகு நாட்களாக பிள்ளைகற்றிருந்து, பின்னர் யோசேப்பைப் பெற்றெடுத்தார். அப்பொழுது யாக்கோபு தொண்ணூற்று ஒன்று வயதுள்ளவராயிருந்தார். அச்சமயம் யாக்கோபின் தாயாகிய ரெபெக்காள் தன்னுடைய தாதியாகிய தெபோராளையும், ஈசாக்கினுடைய இரண்டு வேலையாட்களையும் அவரிடத்தில் அனுப்பி, அவர்களைத் திரும்ப கானானுக்குத் திரும்பிவர வேண்டிக்கொண்டார். அவர்கள் அதை யாக்கோபிடம் தெரிவித்தபோது அவர் ராகேலுக்காக சேவித்த ஏழு வருடங்களும் நிறைவேறியிருந்தது. ஆகவே அவர் பதினாலு வருடம் முடிவுற்ற அந்நாளிலேயே லாபானிடம் சென்று என்னுடைய மனைவிகளை எனக்குத் தாரும். என்னுடைய தாயார் என்னை அழைத்தனுப்பியுள்ளார். ஆகவே நான் என் நாட்டிற்குத் திரும்பிச்செல்ல வேண்டும் என்று கூறினார். அதற்கு லாபான் யாக்கோபை நோக்கி, “உம்முடைய கண்களில் எனக்கு தயவு கிடைத்ததானால் என்னோடே தங்கியிரும். நான் உமக்கு ஊதியம் தருவேன்” என்றார். அதனால் யாக்கோபு ஆரானிலேயே தங்கிவிட்டார். எனவே ரெபெக்காள் அனுப்பிய ஈசாக்கின் வேலைக்காரர் கானானிற்குத் திரும்பிவிட்டனர்.

பின்னும் யாக்கோபு ஆறு வருடங்கள் ஆரானிலே லாபானுடன் தங்கியிருந்தார். அவருடைய மந்தை பலுகிப் பெருக ஆரம்பித்தது. அவை கொழுமையும் அழகுள்ளவையாயும் இருந்ததினால் அனைவரும் யாக்கோபின் ஆடுகளை வாங்க விரும்பினார்கள். யாக்கோபு அவ்வாடுகளுக்குப் பதிலாக வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும், கழுதைகளையும், ஒட்டகங்களையும் கேட்பார். அவர் மனவிருப்பப்படி அனைவரும் அவர் கேட்டவைகளைக் கொடுத்து ஆடுகளைப் பெற்றுக் கொண்டனர். யாக்கோபின் செல்வம் மிகவாய் பெருகியது. அவர் பெரிய செல்வந்தனானார். லாபானுடைய குமாரர் யாக்கோபைக் கண்டு பொறாமைக்கொண்டு யாக்கோபு தங்கள் தகப்பனாருடைய எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டார் என்று சொல்லிக்கொண்டனர். இதையறிந்த யாக்கோபு அவர்கள் முகங்களைக் கவனிக்க ஆரம்பித்தார்.

தேவனாகிய கர்த்தர் யாக்கோபிடம் தோன்றி “யாக்கோபே, நீ எழும்பி இவ்விடத்தை விட்டு நீ பிறந்த பூமிக்கு கடந்துபோ. நான் உன்னோடேகூட இருக்கிறேன்” என்றார். உடனே யாக்கோபு எழுந்து தன்னுடைய குமாரரையும், தன் மனைவிகளையும், தன் வேலைக்காரர்களையும், பின்னும் தனக்கு உண்டான எல்லாவற்றையும் ஒட்டகங்களில் ஏற்றி, தன் தகப்பனாருடைய தேசமாகிய கானான் தேசத்திற்கு புறப்பட்டார். அவர்கள் லாபானிடம் சொல்லாமல் புறப்பட்டதால் அவர் தங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று எண்ணி, ராகேல் தன் தகப்பனாருடைய சிலைகளை களவாய் எடுத்துக்கொண்டார். லாபான் வீட்டிற்கு வந்தபோது யாக்கோபையும் அவருக்கு உண்டாயிருந்த ஒன்றையும் காணாமல் திகைத்துப்போய், தன் சகோதரரையும், தன்னுடைய அனைத்து வேலைக்காரர்களையும் அழைத்துக்கொண்டு யாக்கோபைத் தேடிப் புறப்பட்டார். அவர்களை கிலெயாத்தில் கண்டுபிடித்து இருவரும் ஒருவரோடொருவர் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

லாபான் தன் வீட்டிற்கு விரைந்து சென்று, பேயோர் என்னும் தன் பதினேழு வயது மகனை அழைத்து அவனையும் அவனோடு பத்து ஆட்களையும் விரைவாக மாற்று வழியில் சேயீர் தேசத்தில் வசிக்கும் ஏசாவினிடத்திற்கு அனுப்பி, “உன்னுடைய தாயாரின் சகோதரனும், பெத்துவேலின் மகனாகிய லாபான் உன்னிடம் சொல்வதாவது, உன் சகோதரனாகிய யாக்கோபு என்னிடம் வந்த போது ஒன்றுமில்லாதவனாக வந்தான். நான் அவனை என்னிடமாய் அழைத்து அவனை பெரியவனாக்கி, என்னுடைய குமாரத்திகளையும் மற்றும் இரண்டு வேலைக்காரிகளையும் மனைவிகளாகக் கொடுத்தேன். என்னிமித்தம் கர்த்தர் அவனை ஆசீர்வதித்துப் பெருகச் செய்து அவனுக்கு குமாரரும் குமாரத்திகளும் பிறந்தார்கள். அவன் பெரிய மந்தையையும் உடையவனானான். ஆடுகள், கழுதைகள், ஒட்டகங்கள் மற்றும் பொன் வெள்ளி எல்லாம் அவனிடம் மிகுதியாக உள்ளது. தன்னுடைய ஆஸ்தி பெருகியது என்று அவன் கண்டபொழுது, நான் ஆடுகளை மயிர் கத்தரிக்கச் சென்ற சமயம் பார்த்து ரகசியமாக என்னைவிட்டு புறப்பட்டுப் போய்விட்டான். அவன் தன்னுடைய மனைவிகளையும் குமாரரையும் ஒட்டகங்களில் ஏற்றி என்னிடமிருந்து சம்பாதித்த அனைத்தையும் எடுத்துக்கொண்டு தன் தகப்பனாகிய ஈசாக்கின் தேசத்திற்கு புறப்பட்டுவிட்டான். அவன் என் குமாரத்திகளையும் அவன் குமாரரையும் முத்தஞ்செய்யும் வாய்ப்பையும் எனக்குக் கொடுக்கவில்லை. தேசத்தை பட்டயத்தால் முற்றுகையிட்டுச் செல்வதுபோல என் குமாரத்திகளையும் எடுத்துக்கொண்டு என் தெய்வங்களையும் திருடிக்கொண்டு ஓடிவிட்டான். இப்பொழுது நான் அவனையும் அவனுடைய எல்லாவற்றையும் யாப்போக்கு நதியண்டையில் விட்டுவிட்டு வந்துள்ளேன். அவனுக்கு குறையுள்ளது ஒன்றுமில்லை. உனக்கு சம்மதியானால் நீ அவனை அங்கே கண்டுகொள்ளலாம்” என்று கூறினான். இதை கேட்ட ஏசாவின் கோபம் பற்றி எறிந்தது. அவன் யாக்கோபினிடம் தனக்கிருந்த வெறுப்பை நினைவுகூர்ந்தான்.

உடனே ஏசா தன்னுடைய குமாரரையும் தன்னுடைய வேலைக்காரரையும் பின்னும் தன் ஆத்துமாவிற்கு ஏற்றவர்களுமாக அறுபது பேரையும், சேயீர் மக்களின் குமாரர் முந்நூற்று நாற்பது பேரையும் அழைத்துக்கொண்டு, நானூறுபேராக உருவியப் பட்டயத்தோடு யாக்கோபை கொலைச்செய்ய புறப்பட்டான்.

லாபானின் தூதுவர்கள் விரைவாக கானானுக்குச் சென்று ரெபெக்காளிடம் சென்று, “இதோ யாக்கோபு புறப்பட்டு கானானுக்கு வருவதை அறிந்த ஏசா நானூறுபேரோடு சென்று யாக்கோபோடு போர் செய்து, யாக்கோபை கொலை செய்ய செல்கிறார்” என்றனர். ரெபெக்காள் ஈசாக்கின் வேலைக்காரர் எழுபத்திரண்டு பேரை அனுப்பி, “மகனே என் வார்த்தைகளுக்குச் செவி கொடு. உன் சகோதரனாகிய ஏசா உன்னை கொலை செய்ய நானூறு பேரோடு கடந்து வருகிறான். நீ அவனிடம் சாந்தமாக நடந்து கொள். கர்த்தர் உனக்குத் தந்தவற்றிலிந்து பரிசுப்பொருட்களை அவனுக்குக் கொடு. அவன் உன்னிடம் கேட்பதை ஒன்றையும் அவனுக்கு மறுக்காதே. அவனை நீ கனப்படுத்தவேண்டியது உன் கடமையாகும். ஏனெனில் அவன் உனக்கு மூத்தவன்” என்றார். யாக்கோபு தன் தாயாருடையச் செய்தியை கேட்டவுடன் மிகவும் அழுதார். தன் தாயாரின் செய்திக்கு செவிமடுத்தார்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## The Secret Formula

"Is there a secret formula for success? questioned a young man desperately to every successful person he met....
**"Success is all about 99% perspiration and 1% inspiration...."** mentioned a wiseman.
Immediately,the young man started working hard day in and out sweating out his brow... soon his health failed to cope with him.
"Hold on...**HEALTH IS WEALTH**..." said another successful one
So he spent his time on fitness and nutrition.
His lost his time just for food and personal care...
"**TIME IS MONEY** ..." said another successful man.
So he started calculating money for every minute he spent ...even with his friends and family....
No sooner, he lost his family and friends.
The young man was now totally broke
He was now desperately thirsty for success.
He then went around searching for books in the market place....
He read them over and over again and
Tried them one after the other but he failed miserably.
"No one can change your destiny...." said one philosopher friend.
" It's the cause of your sins and that of your forefathers" said a close relative.
"Tis the rich man's world....just change your life style " replied some rich folks."Alcohol, drugs, cinema, disco, pornography, night clubs....
Will keep you free from worries" advised a rich friend.
OOPs... Very soon he became an addict to pleasures of the world
Heaping coals of fire upon himself,
Oh! No! His life was now in very bad shape beyond redemption by any success formula.....
"Young man, here's the **World's best selling book**! This Book will guide you in the way you should go" said an Evangelist holding **THE HOLY BIBLE** in his hand..

"What?? Will it show me the way? asked the young man.
Yes, this Book of Commands will make you wiser than any of your opponents, it will give you more insight than all your teachers,
You will have more understanding than all the Elders,
Its promises taste more sweeter than honey to your mouth,
Its commands are a light to your path, (Ps:119:97-105)
You no longer have to search for your way like a blind man searching in darkness,
This Book has guided the kings of the old and the present age,
Their secret formula is hidden in this book.....
Success is not all about riches, not your academic excellence, not your career.... But success is all about being a blessing to others.
Yes, Jesus said, "Beware! Life is not measured by the abundance of possession you own" (Luke:12:15). It is all about faithfully accomplishing the plan the Creator has designed for you....
A thorough knowledge of the Bible is worth more than a college education, said President Theodore Roosevelt.
Within the covers of the Bible are the answers for all the problems we face, said President Ronald Reagan.
Isaac Newton, the greatest scientific genius the world has ever known, spent more time in discovering the Truths hidden in the Bible than on Science.
Ancient King Josiah was hardly 8 years old when he was crowned,
The little boy went around searching and discovered his success formula from the Book of Law which was neglected by his ancestors...
He neither went left or right but obeyed the Holy Book of Law
He led a blameless life acceptable in the sight of God,
This Book of Law guided him to make the right decision for his people
So Read! Read and discover the secret formula for your life...
Hearing the inspiring words of the Evangelist,
The young man started reading the Book of Life with faith.
The word of God started changing his life! He discovered the secret formula for success....
Touched by the love of Jesus on the cross of Calvary,
The young man surrendered his life to Jesus to please Him and
Walk in His ways, thus making a difference leading a blessed life...

# திருச்சபை ஜெபநாள் 11-06-2017

"கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வ காலத்த அதிசயங்களையே நினைவுகூருவேன்." சங்கீதம் 77:11

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- தொழிலாளர் ஆராதனை, Junior Church Retreat, சுகமளிக்கும் மருத்துவப் பணியாளர் ஆராதனை யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக

- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
